மடத்துக்குளத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்றால், 22 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டியுள்ளது. மடத்துக்குளம் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே, மாண்புமிகு அம்மா அவர்களால், 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவிலே கட்டடம் கட்டப்பட்டுள்ளது. எனவே, போக்குவரத்துச் சிரமத்தைக் குறைக்கக்கூடிய வகையிலும், அந்த அங்காடியிலே இருப்பவர்களுக்குச் சிரமத்தைக் குறைக்கக்கூடிய வகையிலும், தற்போது தற்காலிகமாக வாடகை கொடுத்து, அந்த இடத்திலே கிடங்கு அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கிடங்கு மடத்துக்குளம் தாலுகாவில் கட்டி, அது பயன்பாட்டிற்கு வரும்வரையில், மாற்று ஏற்பாடாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று மடத்துக்குளம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கிடங்கினை வாடகைக்கு எடுத்து, அத்தியாவசியப் பொருட்களை இருப்பு வைத்து, விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

பால் குளிரூட்டும் நிலையம்

***4155—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2013 அக்டோபர் 24]

உசிலம்பட்டி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உசிலம்பட்டி தொகுதியில் உற்பத்தியாகும் பால் முழுவதும் குளிரூட்டம் செய்யப்பட்டு, கையாளுவதற்குப் போதுமான உள்ளீட்டு வசதிகள் உள்ளதால், புதியதாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்திற்கேற்ப, பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி விவசாயத்தைப் பின்னணியாகக் கொண்ட தொகுதி. அந்தப் பகுதியில் கால்நடைகள் அதிகம் உள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திலும் அங்கே கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையிலும் அந்தப் பகுதியிலே பால் உற்பத்தி அதிகமாக இருக்கின்றது. அந்தப் பாலினை மதுரைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றால், 50 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதால் காலை 3-00 மணி, 4-00 மணிக்கெல்லாம் பாலினைக் கறவை செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த அடிப்படையில், அந்தப் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் இருந்தால், மிகவும் வசதியாக இருக்கும். அதனால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். எனவே, அதனை விரைந்து செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதியில் 9 இடங்களில் தொகுப்புப் பால் குளிர்விப்பான்கள் இயங்கி வருகின்றன. இப்பகுதியில் கொள்முதல் செய்யப்படும் 36,381 லிட்டர் பால், இந்த 9 தொகுப்பு பால் குளிர்விப்பான்கள்மூலம் குளிர்விக்கப்பட்ட பின்னர், மதுரை பால் பண்ணைக்கு டேங்கர்மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது. மீதமுள்ள 27,793 லிட்டர் பால், பால் லாரிகள்மூலம் அருகிலுள்ள மதுரை பால் பண்ணைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. எனவே, உசிலம்பட்டி தொகுதியில் பால் கொள்முதல் அதிகரித்தாலும், அதனைக் கையாளத் தேவையான உட்கட்டமைப்பு வசதி அங்கு உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், உசிலம்பட்டி தொகுதியில் இ. புதுப்பட்டி கிராமத்தில் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மொத்தக் குளிர்விப்பானும் மற்றும் அம்மூத்தம்பட்டி கிராமத்தில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மொத்தக் குளிர்விப்பானும் புதிதாக நிறுவப்படவுள்ளன என்பதால், உசிலம்பட்டி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதுபற்றி பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 36,300 லிட்டர் பால் அங்கே உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; அந்தப் பகுதிக்குப் பக்கத்திலே கேரள மாநிலம் இருக்கின்றது. இங்கே உற்பத்திச் செய்யப்படும் பாலினை நாம் அங்கும் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். எனவே, அந்தப் பகுதியில் பால் குளிரூட்டும்*

2013 அக்டோபர் 24]

நிலையம் அமைந்தால், அங்கே கொண்டு செல்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும். அதனால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்துகொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்திற்கேற்ப பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் கூட்டுறவு பால் உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தின் மூலமாக சுமார் பத்தாயிரம் லிட்டர் பால், விற்பனையாளர்கள்மூலம் கேனில் வைத்து விற்பனை செய்யப்படுகிறது. பால் குளிரூட்டும் கருவியும், போதிய இடவசதியும் உள்ளதால், வருகின்ற மகாமகத்தைக் கருத்தில்கொண்டும் தரமான கொழுப்பு மற்றும் புரதச் சத்துமிக்க ஆவின் பாக்கெட் பால் வழங்கும் வகையில் கும்பகோணத்தில் பால் பதனிடும் நிலையம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று, ஆய்வு செய்து, அதுகுறித்து பரிசீலனை செய்யப்பெற்று பதனிடும் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

ஆய்வு மாளிகை

*__8704__—**திரு. அர. சக்கரபாணி:***

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, பரப்பலாறு அணையிலுள்ள ஆய்வு மாளிகையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒட்டன்சத்திரம் வட்டம், பரப்பலாறு அணையிலே உள்ள ஆய்வு மாளிகை பராமரிக்கப்படுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். ஒட்டன்சத்திரம் வட்டம், பரப்பலாறு அணையிலே உள்ள ஆய்வு மாளிகை ஒவ்வோர் ஆண்டும் அணை பராமரிப்பிற்கென ஒதுக்கப்படும் நிதியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், ஒட்டன்சத்திரம், பரப்பலாறு அணையைச் சீரமைக்க அணை பாதுகாப்புத் திட்டம் பகுதி-III-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அணை பாதுகாப்புத் திட்டத்திற்கான திட்ட மதிப்பீட்டில் ஆய்வு மாளிகையைச் சீரமைக்கவும் சேர்க்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*